23.04.2025 OS.No.169/2011

சாட்சி : PW 2 இராமநாதன்.

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

**1.** நான் பிறந்த ஊர் ஆறாவயல் என்ற சண்முகநாதபுரம் என்றால் சரிதான். நான் சுவிகாரம் வந்த ஊர் காரைக்குடி. தற்போது தொடர்ச்சியான இருப்பு சென்னை என்றால் சரிதான், சிலசில சமயம் ஊருக்கு வந்து போவேன். நான் அரசியல் கட்சியில் முக்கிய பொறுப்பில் இருந்தேன் என்றும் அதனால் எனக்கு நீதிமன்றத்தின் நடைமுறை குறித்து சரிவர தெரியும் என்றால் தெரியும், ஆனால் நான் அரசியல் கட்சி பொறுப்பில் இருந்தது இல்லை. நான் ஒரு நல்ல மேடைப்பேச்சாளர் என்றாலும், தமிழ் அறிஞர் என்றாலும் சரிதான்.

2. இந்த வழக்கு விவரங்கள் அனைத்தயையும் நான் படித்து பார்த்தேனா என்றால் நான் தற்போது தாக்கல் செய்திருந்த நிருபணவாக்குமூலம் நான் ஏற்கனவே தாக்கல் செய்திருந்து நிருபணவாக்குமூலம் பற்றிய விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். பிராது மற்றும் எதிர்வழக்குரையில்் குறிப்பிட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிராதில் கண்டுள்ள சொத்துக்கள் எத்தனை என்று சொன்னால் சௌந்தரம் ஆச்சி இருந்த வீடு, சிவகங்கையில் உள்ள வீடு ஆகிய இரண்டு இலக்க சொத்துக்கள் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். காரைக்குடியில் உள்ள சொத்து தற்போது யார் பெயரில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், வாரிசு என்ற முறையில் 1ம் பிரதிவாதியான முத்துராமன் என்பவர் பெயரில் உள்ளது.

3. சிவகங்கையில் உள்ள வீடு யார் பெயரில் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதியான முத்துராமன் என்பவர் பெயரில் உள்ளது. சிவகங்கையில் உள்ள கடை யார் பெயரில் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதியான முத்துராமன் என்பவர் பெயரில் உள்ளது. வழக்கிடை மூன்று சொத்துக்களும் பூர்விக சொத்து பின்னர் அவர் அதில் கடை வைத்தார். எனது நிருபணவாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி பங்காளி முறை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த வாதியும் எனக்கு பங்காளி முறை என்றால்

சரிதான். வாதி எனக்கு மிகவும் நெருக்கமாக பல்வேறு முறைகளில் எனக்கு தொடர்பு உடையவர் என்றால் சரியல்ல.

4. எனது வகையில் மொத்தம் 50 பங்காளிகள், 50 தலைக்கட்டுகள் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வகையில் என்னைவிட வயது முதிர்ந்தவர்கள் உள்ளனர் என்றால் சரிதான். காரைக்குடி, சிவகங்கையில் உள்ள சொத்து பூர்வீக சொத்து என்பதற்கு நான் ஆவணம் எதுவும் பார்வையிட்டுள்ளேனா என்றால் நான் ஆவணங்கள் எதுவும் பார்க்கவில்லை, ஆனால் வாரிசு உண்டு. பூர்விக சொத்து என்பது நான் எதை வைத்து கூறினேன் என்றால் மெய்யம்மை ஆச்சி மகன் சொக்கலிங்கம், சொக்கலிங்கம் அவர்கள் சுவிகார மகன் முத்துராமன், முத்துராமனின் முதல் மனைவி மீனாட்சி ஆச்சி. மீனாட்சி ஆச்சியின் மகன் வாதி. வாதி சொக்கலிங்கம் பிறந்த அன்றே அவரது தாயார் இறந்து விட்டார் எனது பங்காளிகளில் மூத்தவர் சிவராமன் செட்டியார் மற்றும் வாதியின் அம்மாவழி அப்பா சுப்பிரமணியசெட்டியார் ஆகியோரும் எங்கள் பங்காளிகள் சேர்ந்து மீனாட்சி ஆச்சியின் நகை மற்றும் பணம் ஆகியவை வைத்து படிக்கவைத்தார்.

5. நான் சொல்லியுள்ள யதாஸ்தில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த யதாஸ்துவை நான் படித்து பார்த்துள்ளேன். அந்த யதாஸ்துவில் உள்ளபடி நடந்து கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அந்த யதாஸ்துவில் சொத்துகள் சம்மந்தமாக எவ்வித குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மீனாட்சி ஆச்சி 1972 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி முத்துராமனின் தந்தை வழி தாயார் மெய்யம்மை ஆச்சி 1ம் இலக்க சொத்துக்களை எந்த ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. அந்த சொத்தினை 1ம் பிரதிவாதியின் பாட்டி எப்படி கிரையம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் சேமிப்பு பணம் வைத்து கிரையம் வாங்கினார். பிராது 2, 3 இலக்க சொத்துக்கள் எந்த ஆண்டு கிரையம் பெறப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ 1 ஆவணம் தான் நான் கூறும் யதாஸ்து என்று சொன்னால் சரிதான்.

6. 1, 2, 3 வது இலக்க சொத்து தற்போது யார் வரி செலுத்துகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் 1ம் பிரதிவாதிதான் கட்டிவருகிறார் பிரிக்கப்படாத சொத்துக்கு வேறு யார் வரி கட்டமுடியும். நான் சொல்வது போல மூன்று இலக்க சொத்துக்களும் 1ம்

பிரதிவாதி முத்துராமன் பெயரில் இல்லை என்று சொன்னால் சரிதான், பிரிக்கப்படாத சொத்துக்கள் என்பதால் அது முன்னோர்கள் யெரில் இருக்கலாம். வாதி சொக்கலிங்கம் செட்டியார் காண்பித்துள்ள வம்சாவழி பட்டியல் வா.சா.ஆ1ல் உள்ள நபர்களை வேறு யாரும் முன்னோர்கள் இல்லை என்றால் சரிதான். இதை தவிர வேறு முன்னோர்கள் இல்லை என்றால் இல்லை.

7. இந்த சொத்துக்களை வாதியும் 1ம் பிரதிவாதியும் கூட்டாக அனுபவம் செய்துவருகிறார்கள் என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் திருமண அழைப்பிதழில் 1ம் பிரதிவாதி பெயர் போட்டுள்ளது, மேலும் 1ம்பிரதிவாதி வாதியை மகனாக ஒப்புகொண்டுள்ளதால் சொத்து கூட்டு அனுபவத்தில் உள்ளது என்று சொல்கிறேன். கூட்டு அனுபவத்திற்கு நான் ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது நிருபணவாக்குமூலத்தில் பொது குடும்ப வருமானம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி குடும்பத்திற்கு தொழில் எதுவும் உள்ளதா என்றால் இல்லை, அந்த குடும்பத்திற்கு வாடகை வருமானம் மட்டும் உள்ளது.

8. 1ம் பிரிதிவாதியின் குடும்பத்தின் வாடகை வருமானம் என்ன என்றால் அது சௌந்தரம் ஆச்சி வாடகை வாங்கினார் என்ற விவரம் மட்டுமே தெரியும். அதற்கு பிறகு யார் எவ்வளவு வாடகை வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் வரவு செலவு அவரது பொதுக்குடும்ப வரவு செலவு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் நிருபணவாக்குமூலத்தில் சில சொத்துக்களை சிவகங்கையிலும் மற்ற இடங்களிலும் வாங்கியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் மற்ற இடங்களில் என சொல்லியுள்ளது எந்த இடம் என்றால் காரைக்குடியில் முத்துராமன் ஒரு சொத்து வாங்கியுள்ளார் அது மட்டும் தான் தெரியும். அந்த சொத்து பிராதில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சில சொத்துக்களுக்கு பாக பிரிவினை கேட்டும் சில சொத்துக்களுக்குபாக பிரிவினை கேட்டக்கபடாமலும் உள்ளது என்றால் முன்னோர்கள் சொத்துக்களுக்கு கேட்கப்பட்டுள்ளது,1பிரதிவாதி சொத்துக்களுக்கு கேட்கபடவில்லை. (பின்னர் சாட்சி 1ம் பிரதிவாதி சொத்துக்களுக்கும் கேட்கப்பட்டுள்ளது என்று கூறினார்.)

9. 1ம் பிரதிவாதியின் தந்தை மெய்யப்பன் என்ற சொக்கலிங்கம் 1960 ல் இ றந்து விட்டார் என்றால் சரிதான். மேற்படியாரின் மனைவி சௌந்தரம் ஆச்சி 1976 ல் இறந்து

விட்டார் என்றால் சரிதான். யதாஸ்துவில் சொல்லியுள்ளபடி வாதி படித்தது சென்னையில் தான் என்றால் சரிதான். ஆறாவயலிலும் படித்ததுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் 2வது மனைவி விசாலாட்சி சிவகங்கையில் ஜவுளிகடை நடத்தி வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும், வாதி சொன்னதன் அடிப்படையில் தெரியும். 1ம்பிரதிவாதியின் மகன் மணிகண்டன் படித்தது வேலை பார்த்தது குறித்த விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும், அவர் படித்து முடித்துவிட்டு வேலை பார்த்தார். 1ம் பிரதிவாதி மகன் படித்து கொண்டே வேலை பார்த்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 2ம் பிரதிவாதி தான் ஈட்டிய பணத்தைக்கொண்டும், 3 ம் பிரதிவாதி தான் ஈட்டிய பணத்தைக்கொண்டும் 2, 3 இலக்க சொத்துக்களை வாங்கினார்கள் என்றால் தவறு. பிராது 1வது இலக்க சொத்து பூர்வீக சொத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல.

10. இந்த வழக்கு சொத்தில் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எந்தவிதமான கூட்டு அனுபவமும் எந்த பிராது சொத்திலும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வாதியின் திருமணம் எங்கு நடைபெற்றது என்றால் பள்ளத்தூரில் நடைபெற்றது. பெண் அழைப்பு எங்கு நடைபெற்றது என்றால் காரைக்குடியில் ஒரு மண்டபத்தில் நடைபெற்றது. வாதியின் மகள் பூப்புனித நீராட்டு விழா எங்கு நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. வாதியின் திருமணத்திற்கு நான் சென்றேனா என்றால் இல்லை, பழனி பாதயாத்திரைக்காக சென்று விட்டேன். வாதியின் தந்தையின் மீது வழக்கு தாக்கல் செய்ய நான் தான் அறிவுறுத்தியுள்ளேன் என்றால் சரிதான், அதாவது 1ம்பிரதிவாதி எந்த வித பேச்சுவார்த்தைக்கும் ஒத்து வரவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்ய அறிவுறுத்தினேன்.

11.தாவா சொத்துக்களில் எந்த சொத்தும் பூர்விக சொத்து இல்லை என்றாலும் எந்த சொத்தும் பொதுக்குடும்ப வருமானத்தில் இருந்து கிரையம் பெற்றது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதிக்கும் எனக்கும் நெருக்கமான தொடர்பு என்றும் அதனால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.